**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, DENKANIKOTTAI.**
**Present: J. Dhinesh Kumaran,B.A.,B.L.,(Hons)**
**District Munsif Cum Judicial Magistrate, Denkanikottai**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | CC. No. 100/2025 |
| Deposition of witness for Prosecution<br>Defence<br>Court | PW : 1 (LW -1 ) |
| Name: | திரு. சுஜித் |
| Father's/Husband Name: | த/பெ. ரவிக்குமார் |
| Village: | எஸ் ஆர் நகர், Thally |
| Taluk: | தேன்கனிக்கோட்டை |
| Age: | 20 |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 of the day **19.05.2026.** | |

Accused present. Counsel for the accused Mr. Srinivasan present. Learned APP Present.

**விசாரணை தொடங்கப்பட்ட நேரம்: 12.08 P.M**

**முதல் விசாரணை-**

1. நான் எஸ் ஆர் தளியில் குடியிருக்கிறேன். நான் பிபிஏ பட்டப்படிப்பு படித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டில் தான் குடியிருந்து வருகிறார். கடந்த 11-10-2024 ம் தேதி இரவு 9.00 மணியளவில் தளி - ஜவளகிரி செல்லும் சாலையில் உள்ள வெங்கடேஷ்வரா பேக்கரி அருகே நானும் எனது நண்பர்கள் ரஞ்சித், பிரசாந்த், நரசிம்மன் ஆகியோர் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி திலீப்குமார் அந்த இடத்திற்கு வந்தார். ஆஜர் எதிரி என்னை நோக்கி என் பெயர் சொல்லி லவடக்கேபால் என்று என்னை கெட்டவார்த்தையால் திட்டினார். நான் அவரிடம் எதற்காக இவ்வாறு பேசுகிறீர்கள் என்று கேட்டப்போது ஆஜர் எதிரி கோவப்பட்டு நான் உட்கார்ந்திருந்த Slab மீது இருந்து என்னை கையை பிடித்து கீழே தள்ளினார்.

2. நான் கல் மீது கையை ஊன்றியபோது அவர் எனது கையை அவரது கால் முட்டியை வைத்து திருப்பினார். பின்னர் எனது கழுத்தை கையால் நெறித்தார். ஆஜர் எதிரி என்னை முட்டியால் கையில் தாக்கியதில் எனது கை எழும் பு உடைந்து வெளியே வந்துவிட்டது. பின்னர் எனது நண்பர் ஒருவர் ஆஜர் எதிரியை விலக்கிவிட்டார். பின்னர் எனது நண்பர்கள் பிரசாந்த் மற்றும் நரசிம்மன் ஆகியோர் என்னை தளியில் உள்ள நாகேஷ் மருத்துவமனைக்கு என்னை அழைத்து சென்றார்கள். அந்த மருத்துவமனையில் போதுமான வசதிகள் இல்லாததால் ஓசூரில் உள்ள சந்திரசேகர் மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் வாயிலாக சென்றோம். என்னை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதித்து பின்னர் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் அங்கு வந்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகின்றது**.

3. நான் மருத்துவமனையில் ஒரு வாரம் சிகிச்சை பெற்றேன். அப்போது எனக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. பின்னர் எனது எழும்பில் தொற்று ஏற்பட்டு 6 மாதம் கழித்து மீண்டும் ஒரு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அதே மருத்துவமனையில் தான் நான் மீண்டும் சிகிச்சை பெற்றேன். பின்னர் மேலும் 3 மாதம் கழித்து மற்றொரு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. தொடர் சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் அறுவுறுத்தியுள்ளார்கள். ( **நீதிமன்ற குறிப்பு சாட்சி தனது இடது கையை நீதிமன்றத்தில் காண்பித்தார். அவர் கையில் இதுவரை 3 முறை அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக கூறுகிறார். அறுவை சிகிச்சை செய்து தையல் போட்டதற்கான தழும்புகள் சாட்சியின் இடது கையில் முன்பக்கமும் பின்பக்கமும் உள்ளது**. ) போலீசார் இந்த வழக்கு தொடர்பாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

4. நான் கடந்த 2024 ம் வருடம் கல்லூரியில் படித்து வந்தேன் என்றால் சரிதான். அப்போது Fashion Designing படித்து வந்தேன். அச்சமயத்தில் என்னால் படிப்பிற்கு பணம் கட்ட இயலாததால் ஆஜர் எதிரி திலீப்பிடம் நான் கடன் பெற்றிருந்தேன் என்றால் இல்லை. திலீப்பிடம் பணம் இல்லாத காரணத்தினால் அவர் வேறு ஒரு நபரிடம் ரூ. 25.000/-/ கடனாக பெற்று என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

5. திலீப் என்னிடம் கொடுத்த பணத்தை கேட்டப்போது அவருக்கு நான் பணம் தராமல் ஏமாற்றி வந்தேன் என்றால் சரியல்ல. இதனால் தான் எனக்கும் திலீப்பிற்கும் இடையே கடன் பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரியல்ல. திலீப் என்னை பார்த்தால் பணம் கேட்பார் என்பதற்காக அவரை பார்ப்பதை நான் தவிர்த்து வந்தேன் என்றால் சரியல்ல. ஒரு நாள் நான் திலீப்பை நேரடியாக

சந்தித்தப்போது எங்களுக்குள் பணம் தொடர்பாக சண்டை நடைபெற்றது என்றால் சரியல்ல. நான் தான் திலீப்பை பணம் கொடுக்காமல் ஏமாற்றி அடித்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய நண்பர்கள் திலீப்பை கழுத்தை பிடித்து நெறித்து காயப்படுத்தியுள்ளார்கள் என்றால் சரியல்ல. திலீப் எங்கள் மீது புகார் கொடுத்து விடுவார் என்பதற்காக பொய்யாக நான் சந்திரசேகர் மருத்துவமனையில் சேர்ந்து அவர் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. உண்மையாக திலீப் என்னை அடித்திருந்தால் நான் அன்றைய தினமே தளி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் அவ்வாறு உடனடியாக புகார் கொடுக்காததால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அன்றையதினம் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். திலீப் என்னை அடிக்கவில்லை என்றாலும் என்னிடம் எந்த தகராறும் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் சம்பவம் நடைபெற்ற உடனேயே நான் புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. தளியில் அரசு மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். எனக்கு உண்மையாக அடிப்பட்டிருந்தால் நான் தளி அரசு மருத்துவமனையிலேயே சிகிச்சை பெற்றிருப்பேன் என்றாலும் சீனிவாசா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல. சீனிவாசா மருத்துவமனை என்று ஒன்று அங்கு இல்லை. அங்கு பொய்யான மருத்துவ சான்றிதழ் தரமாட்டார்கள் என்பதற்காக தான் ஓசூரில் நான்சிகிச்சை பெற்றேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெற்ற தேதி 11-10-2024 ஆகும் என்றாலும் 13-10-2024 ம் தேதி தான் காவல் துறையினருக்கு நான் தகவல் அளித்தேன் என்றால் சரிதான், நான் 11-10-2024 ம் தேதி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன், பின்னர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டேன்,எனக்கு நினைவு தெரிந்தது 13-10-2024 ம் தேதியாகும். அதனால் தான் காலதாமதம் ஏற்பட்டது.

7. என்னுடைய அம்மா சத்துணவு அமைப்பாளராக உள்ளார் என்றால் சரிதான். அதனால் தளி பிடிஓ மூலமாக காவல் துறையினரை அனுகி இந்த பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. திலீப் என்னிடம் கொடுத்த பணத்தை திருப்பி கேட்டதால் அவரை நாங்கள் அடித்து தாக்கியுளோம் என்றாலும் பணத்தை எப்போது கேட்டு வரக்கூடாது என்று அவரை அடித்து விரட்டினோம் என்றாலும் சரியல்ல. இடது கையில் உள்காயம் ஏற்பட்டதாக மட்டுமே போலீசாரிடம் நான் வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றாலும் எழும்பு வெளியே வந்ததாக சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. தளிக்கும் ஓசூருக்கும் இடையே 28 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். சந்திரசேகரா மருத்துவமனை பாகலுார் சாலையில் உள்ளது என்றால் சரிதான்.

8. தளியிலிருந்து ஓசூர் செல்வதற்கு இரவு 8.00 மணிக்கு தான் கடைசி பேருந்து என்றால் சரிதான். நானும் எனது தாயாரும் ஓசூர் மருத்துவமனைக்கு இரவு 9.00 மணிக்கு தான் சென்றதாக

போலீசில் வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல சம்பவம் 9.00 மணிக்கு தான் நடைபெற்றது. என்னுடைய புகார் வாக்குமூலத்தில் அவசர ஊர்தியில் மருத்துவமனைக்கு சென்றதாக நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆம்புலன்சில் சென்றதாக தான் சொல்லியுள்ளேன். இருசக்கர வாகனத்தில் செல்லும்போது ஒரு நபர் கீழே விழுந்தால் எனக்கு ஏற்பட்டது போல காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றாலும் பணத்தை ஆஜர் எதிரி திருப்பி கேட்டதால் பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

. **விசாரணை முடிவுற்ற நேரம்** 12.38 P.M.

ஒம் ./-. திரு. J. தினேஷ்குமரன் , B.A.B.L., (Hons)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை
நடுவர், தேன்கனிக்கோட்டை .

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, DENKANIKOTTAI.**
**Present: J. Dhinesh Kumaran,B.A.,B.L.,(Hons)**
**District Munsif Cum Judicial Magistrate, Denkanikottai**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | CC. No. 100/2025 |
| Deposition of witness for Prosecution<br>Defence<br>Court | PW : 2 (LW -2 ) |
| Name: | திரு.ரஞ்சித் |
| Father's/Husband Name: | த/பெ.சீனிவாசன் |
| Village: | தளி |
| Taluk: | தேன்கனிக்கோட்டை |
| Age: | 24 |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 of the day **19.05.2026.** | |

Accused present. Counsel for the accused Mr. Srinivasan present. Learned APP Present.

**விசாரணை தொடங்கப்பட்ட நேரம்: 12.40 P.M**

**முதல் விசாரணை-**

1. நான் தளியில் குடியிருக்கிறேன். நான் மருத்துவ படிப்பு படித்து வருகிறேன். புகார்தாரர் சுஜீத் எனது நண்பர். ஆஜர் எதிரி திலீப்குமாரையும் எனக்கு தெரியும். கடந்த 11-10-2024 ம் தேதி இ ரவு சுமார் 9.00 மணியளவில் ஜவளகிரி சாலையில் உள்ள வெங்கடேஷ்வரா பேக்கரி அருகில் நானும் எனது நண்பர்களான சுஜித், பிரசாந்த், நரசிம்மா மற்றும் திலீப் ஆகியோர் பேசிக்கொண்டிருந்தோம். அச்சமயம் புகார்தாரர் சுஜீத் ஒரு Slab மீது உட்கார்ந்திருந்தார். புகார்தாரரும் எதிரி திலிப்பிம் பேசிக்கொண்டிருந்தார்கள். பேசிக்கொண்டிருக்கும்போதே புகார்தாரர் சுஜீத் திலிப்பை பார்த்து உங்க அம்மா என்று கெட்ட வார்த்தையால் திட்டினார். உடனே சுஜீத் திலீப்பை நோக்கி கையை ஓங்கினார்.

2. ஆஜர் எதிரி திலீப் சுஜீத்தின் கையை பிடித்து அவரை Slab லிருந்து கீழே இழுத்தார். திலீப் இழுத்ததில் சுஜீத் கீழே இருந்த Slab கல் மீது கையை ஊன்றி விழுந்துவிட்டார். நாங்கள் இருவரையும் விலக்கிவிட்டோம். சுஜீத் சத்தம் போட்டார். அப்போது தான் சுஜீத்திற்கு காயம் ஏற்பட்டு கை எழும்பு வெளியே வந்திருந்தது எங்களுக்கு தெரியவந்தது. நான் திலீப்பை அந்த இடத்திலிருந்து அழைத்து சென்றுவிட்டேன். பிரசாந்தும் நரசிம்மாவும் சுஜீத்தை நாகேஷ் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நாகேஷ் மருத்துவமனையில் ஸ்கேன் செய்துவிட்டு அங்கிருந்து ஓசூரில் உள்ள சந்திரசேகர் மருத்துவமனைக்கு சுஜீத்தை அழைத்து சென்றார்கள். பின்னர் நானும் பிரசாந்தும் சந்திரசேகர் மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு சுஜீத்திற்கு அறுவை சிகிச்சை செய்தார்கள். பின்னர் நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். வழக்கு குறித்து போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**( சாட்சியின் சாட்சியத்தின் ஒரு பகுதியை பிறழ்சாட்சியாக கருத கோரி அரசு தரப்பு வழக்கறிஞரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. கோரிக்கையை சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

3. கடந்த 11-10-2024 ம் தேதி சம்பவத்தின்போது புகார்தாரரும் எதிரியும் பரஸ்பரம் திட்டிக்கொண்டார்கள் என்றால் சரிதான். திலீப் சுஜீத்தை தகாத வார்த்தையால் திட்டியதால் தான் சுஜீத் திலீப்பை நோக்கி கையை ஓங்கினார் என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெற்று எதிரியை விலக்கிவிட்டவுடன் சற்று தூரத்தில் எதிரியும் அங்கு தான் இருந்தார் என்றால் சரிதான். அச்சமயத்தில் எதிரி திலீப் புகார்தாரரை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார் என்றாலும் நான் திலீப் என்னுடைய நண்பர் என்பதால் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 13-10-2024 ம் தேதி காலை 11.00 மணிக்கு போலீசார் சம்பவயிடம் வந்து மகஜர் தயார் செய்து என்னையும் எனது நண்பர்களையும் சாட்சியாக விசாரணை செய்தார்கள் என்றாலும் நான் எதிரிக்கு ஆதரவாக தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில்குறுக்கு விசாரணை

4. திலீப்பிற்கும் சுஜீத்திற்கும் பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக பிரச்சனை உள்ளது குறித்து எனக்கு தெரியாது . என்னுடைய சாட்சியத்தில் முதலில் சுஜீத் தான் தகாத வார்த்தையால் பேசியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் சம்பவயிடத்தில் இருந்தேன் என்றால் சரிதான். புகார்தாரர் உட்கார்ந்திருந்த Slab சுமார் 5 அடியிருக்கும் . புகார்தாரர் 5 அடி Slab மீதுதிருந்து தானாக தவறி விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. எதிரி இழுத்ததால் தான் புகார்தாரர் கீழே விழுந்தார். எம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்பதால் தான் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் எதையும் நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

**விசாரணைமுடிக்கப்பட்ட நேரம் 12.57 P.M**

ஓம் ./-. திரு. J. தினேஷ்குமரன் , B.A.B.L., (Hons)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை
நடுவர், தேன்கனிக்கோட்டை .

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, DENKANIKOTTAI.**
**Present: J. Dhinesh Kumaran,B.A.,B.L.,(Hons)**
**District Munsif Cum Judicial Magistrate, Denkanikottai**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | CC. No. 100/2025 |
| Deposition of witness for Prosecution<br>Defence<br>Court | PW : 3 (LW -3 ) |
| Name: | திரு. பிரசாந்த் |
| Father's/Husband Name: | த/பெ. வெங்கடேஷ் |
| Village: | தளி |
| Taluk: | தேன்கனிக்கோட்டை |
| Age: | 25 |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 of the day **19.05.2026.** | |

Accused present. Counsel for the accused Mr. Srinivasan present. Learned APP Present.

**விசாரணை தொடங்கப்பட்ட நேரம்: 1.00 P.M**

**முதல் விசாரணை-**

1. நான் தளியில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் தொழில் செய்து வருகிறேன். புகார்தாரர் சுஜீத் எனது நண்பர். ஆஜர் எதிரி திலீப்குமாரையும் எனக்கு தெரியும். அவரும் என்னுடைய நண்பர். கடந்த 11-10-2024 ம் தேதி இ ரவு சுமார் 9.00 மணியளவில் ஜவளகிரி சாலையில் உள்ள வெங்கடேஷ்வரா பேக்கரி அருகில் நானும் எனது நண்பர்களான சுஜித், தலீப், நரசிம்மா மற்றும் ரஞ்சித் ஆகியோர் பேசிக்கொண்டிருந்தோம். அச்சமயம் புகார்தாரர் சுஜீத் ஒரு Slab மீது உட்கார்ந்திருந்தார். புகார்தாரரும் எதிரி திலிப்பிம் பேசிக்கொண்டிருந்தார்கள். பேசிக்கொண்டிருக்கும்போதே புகார்தாரர் சுஜீத் திலிப்பை பார்த்து உங்க அம்மா என்று கெட்ட வார்த்தையால் திட்டினார்.

2. ஆஜர் எதிரி திலீப் சுஜீத்தின் கையை பிடித்து அவரை Slab லிருந்து கீழே இழுத்தார். சுஜீத் கீழே விழுந்தபோது கையை ஊன்றினார். அதில் அவருக்கு இடது கையில் எழும்பு முறிவு ஏற்பட்டு எழும்பு வெளியே வந்துவிட்டது. ஒரு வினாடி திலீப் சுஜீத்துடைய சட்டை யை பிடித்தார். சுஜீத் கை கை என்று கத்தினார். பின்னர் நானும் ரஞ்சித்தும் சுஜீ%த்தை நாகேஷ் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்னர் ஓசூர் சந்திரசேகர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலீசார் என்னை இந்த வழக்கு தொடர்பாக விசாரிக்கவில்லை. நேற்று இரவு தான் அழைப்பாணை வழங்கினார்கள்.

**(சாட்சியின் சாட்சியத்தின் ஒரு பகுதியை பிறழ்சாட்சியாக கருத கோரி அரசு தரப்பு வழக்கறிஞரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. கோரிக்கையை சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

3. கடந்த 11-10-2024 ம் தேதி சம்பவத்தின்போது புகார்தாரரும் எதிரியும் பரஸ்பரம் திட்டிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல , முதலில் சுஜீத் தான் பேசினார், பின்னர் திலீப் பேசினார். திலீப் சுஜீத்தை தகாத வார்த்தையால் திட்டியதால் தான் சுஜீத் திலீப்பை நோக்கி கையை ஓங்கினார் என்றால் சரிதான். சம்பவத்திற்கு பிறகு நான் சுஜீத்திடம் அதிகம் பேசுவதில்லை, திலீப்புடன் நல்ல முறையில் பேசி வருகிறேன் என்றால் சரிதான். திலீப்பை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

4. சுஜீத் தான் முதலில் தகாத வார்த்தை பயன்படுத்தினார் என்றால் சரிதான். நாங்கள் சுஜீத்தை பார்த்து எதற்காக கெட்ட வார்த்தை பயன்படுத்துகிறீர்கள் என்று கேட்கவில்லை என்றால் சரிதான். சுஜீத்திற்கும் திலீப்பிற்கும் இடையே உள்ள பணம் பிரச்சனை குறித்து எனக்கு தெரியாது.. Slab லிருந்து தானாக விழுந்து தான் சுஜீத்திற்கு அடிப்பட்டு விட்டது என்றால் Unexpected ஆக கையை கீழே வைத்தப்போது சுஜீத்திற்கு அடிப்பட்டுவிட்டது. நான் சம்பவத்தை நேரடியாக

பார்க்கவில்லை என்றாலும்  அதனால் தான் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**விசாரணைமுடிக்கப்பட்ட நேரம் 1.15 P.M**

ஓம் ./-. திரு. J. தினேஷ்குமரன் , B.A.B.L., (Hons)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை
நடுவர், தேன்கனிக்கோட்டை .

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, DENKANIKOTTAI.**
**Present: J. Dhinesh Kumaran,B.A.,B.L.,(Hons)**
**District Munsif Cum Judicial Magistrate, Denkanikottai**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | CC. No. 100/2025 |
| Deposition of witness for Prosecution<br>Defence<br>Court | PW : 4 (LW -4 ) |
| Name: | திரு. லட்சுமிநரசிம்மன் (எ) நரசிம்மன் |
| Father's/Husband Name: | த/பெ. பிரசன்னகுமார் |
| Village: | தளி |
| Taluk: | தேன்கனிக்கோட்டை |
| Age: | 20 |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 of the day **19.05.2026.** | |

Accused present. Counsel for the accused Mr. Srinivasan present. Learned APP Present.

**விசாரணை தொடங்கப்பட்ட நேரம்: 1.43 P.M**

**முதல் விசாரணை-**

1. நான் தளியில் குடியிருக்கிறேன். நான் கோயிலில் பூஜாரியாக உள்ளேன் வருகிறேன். புகார்தாரர் சுஜீத் எனது நண்பர். ஆஜர் எதிரி திலீப்குமாரையும் எனக்கு தெரியும். அவரும் என்னுடைய நண்பர். கடந்த 11-10-2024 ம் தேதி இரவு சுமார் 9.00 மணியளவில் ஜவளகிரி சாலையில் உள்ள வெங்கடேஷ்வரா பேக்கரி அருகில் எனது நண்பர்களான சுஜித், தலீப், பிரசாந்த் மற்றும் ரஞ்சித் ஆகியோர் பேசிக்கொண்டிருந்தார்கள் அப்போது நான் அங்கு வந்தேன். அச்சமயம் புகார்தாரர் சுஜீத் ஒரு Slab மீது உட்கார்ந்திருந்தார். புகார்தாரரும் எதிரியும் தகாத வார்த்தையால் பேசிக்கொண்டார்கள். சுஜீத் திலீப்பை அடிக்க கையை ஓங்கினார். சுஜீத் Slab லிருந்து கீழே இறங்க முற்பட்டார். அப்பொழுது Slip ஆகி கீழே விழுந்ததில் சுஜித்திற்கு கையில் அடிப்பட்டுவிட்டது. Bone Cut ஆகிவிட்டது.

2. சண்டையை விலக்கிவிட்டு நானும் பிரசாந்தும் சுஜீத்தை நாகேஷ் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்னர் அங்கு சுஜித்திற்கு சிகிச்சை அளித்.தார்கள். பின்னர் ஆம்புலன்சில் சந்திரசேகர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள்.. பின்னர் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத கோரி அரசு தரப்பு வழக்கறிஞரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. கோரிக்கையை ஏற்று சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

3. சம்பவத்தின் பாதியில் தான் சம்பவயிடத்திற்கு வந்தேன் என்றால் சரிதான். எனக்கு சம்பவம் முழுமையும் தெரியாது. புகார்தாரரும் எதிரியும் கெட்டவார்த்தையால் திட்டிக்கொண்டார்கள் என்றால் சரிதான். கீழே சுஜீத் விழுந்தவுடன் அதன் பின்னர் திலீப் சுஜீத்தின் சட்டையை பிடித்து திலீப் கெட்டவார்தையா ல் திட்டினார் என்றால் சரியல்ல. எனது நண்பர்களான ரஞ்சித் மற்றும் பிரசாந்த ஆகியோர் என்னுடன் சம்பவத்தின்போது இருந்தார்கள் என்றால் சரிதான். தற்போது சுஜித்துடன் பேச்சுவார்த்தை இல்லை என்றாலும் திலீப்பிடம் தான் நல்ல பேச்சுவார்த்தையில் உள்ளேன் என்றால் இருவரிடமும் நல்ல முறையில் தான் தற்போது பேசி வருகிறேன். காலையில் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வரும்போது நான் பிரசாந்த், ரஞ்சித், எதிரி திலீப் ஆகியோர் சேர்ந்து தான் வந்தோம் என்றால் சரிதான். எதிரி திலீப்பை காப்பாற்ற வேண்டி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

4. முதலில் சுஜீத் தான் திலீப்பை அடிக்க கை ஓங்கினார் என்று நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் சாட்சியம் அளித்தப்போது சம்பவம் நடந்துக்கொண்டிருந்தபோது இடையில் தான் வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சுஜித் கெட்ட வார்த்தையால் பேசியதால் திலீப் அதுகுறித்து கேட்டப்போது சுஜீத் அந்த

இடத்திலிருந்து ஓட முற்பட்டப்போது கால் தவறி கீழே விழுந்து அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**விசாரணைமுடிக்கப்பட்ட நேரம் 2.00 P.M**

ஓம் ./-. திரு. J. தினேஷ்குமரன் , B.A.B.L., (Hons)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், தேன்கனிக்கோட்டை .